STC.No.106/2026 PW1.திரு.சரவணன்

தேதி– 22.07.2026

எதிரி ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355–ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கஜானா பைனான்ஸ் நிறுவனத்தின் சார்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்தின் என்ன பதவியில் வகிக்கிறேன் என்றால் நிர்வாக பங்குத்தாரராக இருக்கிறேன். நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். கஜானா பைனான்ஸ் நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரிதான். மேற்படி நிறுவனத்திற்குரிய பதிவு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு நிறுவனத்திலிருந்து எனக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது, அதனை தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நிறுவனத்தின் கணக்கு புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் கணக்கு புத்தகம் முறையாக பராமரித்து வருகிறோம், தேவைப்பட்டால் அதனை தாக்கல் செய்கிறேன். நான் எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் 13.09.2025 கம்பத்தில் உள்ள எங்கள் நிறுவனத்தின் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். நான் ரொக்கமாக பணம் கொடுத்தேனா அல்லது வங்கி பரிவர்த்தனையாக கொடுத்தேனா என்றால் இரண்டாவது சனிக்கிழமை என்பதால் எதிரி ரொக்கமாக பணம் கேட்டதன் பேரில் ரொக்கமாக பணம் கொடுத்தேன். அப்போது சாட்சியாக யாரேனும் இருந்தார்களா என்றால் எனது நண்பர் சுரேஷ் இருந்தார். மேற்படி விபரத்தை எனது வழக்காவணங்களில் கூறவில்லை என்றால் பெயர் கூறவில்லை, எனது நண்பர் இருந்தார் என்று கூறியுள்ளேன்.

2. பணம் கொடுத்தற்கு இரசீது அல்லது புத்தகத்தில் எழுதி வைத்துள்ளேனா என்றால் நிறுவன கணக்கு புத்தகத்தில் எழுதி வைத்துள்ளேன். மேற்படி தேதியில் எனது கையில் இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக புரோநோட்டு, பாண்ட் எழுதி

வாங்கினேனா என்றால் காசோலை மட்டும் வாங்கினேன். எதிரி என்னிடம் வட்டிக்கு பணம் வாங்கியதாக வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வட்டி தொகையை நான் வழக்கறிஞர் அறிவிப்பில் கேட்கவில்லை என்றால் அசல் தொகை வரவில்லை என்பதால்தான் அறிவிப்பு அனுப்பினேன். உண்மையில் காசோலையை யாரிடம் வாங்கினேன் என்றால் எதிரியிடம் வாங்கினேன். எந்த தேதியில் வாங்கினேன் என்றால் 13.09.2025 ல் வாங்கினேன். காசோலையில் உள்ள தேதி மற்றும் தொகையை யார் எழுதினார் என்றால் எதிரி பூர்த்தி செய்தார். நான் சொல்வதுபோல் மேற்படி தேதியில் காசோலை கொடுத்திருந்தால் வட்டி தொகையை சேர்த்து தான் கொடுத்திருப்பார் என்றால் ஒரு மாதத்தில் பணத்தை திருப்பி தந்து விடுவதாக கூறி அசல் தொகைக்கு காசோலையை கொடுத்தார்.

3. காசோலையை பொறுப்பிற்காக வாங்கினேன் என்றால் எதிரி வாங்கிய பணத்தை காசோலை மூலம் வசூலுக்கு தாக்கல் செய்யும்படி கூறி கொடுத்தார். காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும், எதிரி நீதிமன்ற கேள்விகளில் அளித்த பதிலின் போது செய்துள்ள கையொப்பத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை. எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் என்னை யார் என்று தெரியாது என்றும், எனக்கும், எதிரிக்கும் இடையே பரிவர்த்தனை இல்லை என எதிரி கூறிய விபரம் தெரியுமா என்றால் அவர் பொய் கூறுகிறார். எதிரி கூறிய குற்றச்சாட்டுகளை மறுக்கும் வகையில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காசோலை தாக்கல் செய்துள்ளேன். எதிரி கூறிய குற்றச்சாட்டுகளை மறுத்து எனது மனுவில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. எதிரியை எனக்கு எவ்வளவு காலமாக தெரியும் என்றால் பணம் வாங்கும் சமயத்தில்தான் எனது நண்பர் சுரேஷ் என்பவர் மூலம் எதிரியை தெரியும்.

4. நான் முதல்முதலில் எதிரியை நான் எப்போது பார்த்தேன் என்றால் 13.09.2025 அன்று தான் பார்த்தேன். 13.09.2025 க்கு பிறகு எதிரியை தொடர்பு கொண்டேனா என்றால் காசோலை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு போன் மூலம் தொடர்பு கொண்டேன். எதிரியின் போன் நம்பர் தெரியுமா என்றால் 9585179146 ஆகும். எதிரி எந்த ஊர் என்றால் விருதுநகர் மாவட்டம், சிவகாசி தாலுகா, அருணாச்சலபுரத்தை சார்ந்தவர் ஆவார். எதிரி கம்பத்திற்கு வந்து பணம் வாங்கினார் என்பதற்கு நான் எந்த

ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் காசோலை தாக்கல் செய்துள்ளேன். நான் எதிரியிடம் ஜாமீன்தாரராக ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை. எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார். எதிரி எங்கள் அலுவலகத்திற்கு வந்ததற்கு சிசிடி வீடியோ பதிவு வைத்துள்ளீர்களா என்றால் இல்லை. எதிரியின் வருகையை பதிவு செய்யும் வகையில் அவரிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். கண்கது புத்தகத்தில் எதிரியிடம் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். எதிரி அவரது நண்பர் மூலம்தான் பணம் கேட்டதாக எனது வழக்கில் கூறியுள்ளேன் என்றும், எனது நண்பர் மூலம் பணம் கேட்டார் என்று கூறவில்லை என்றால் சரியல்ல.

5. எங்கள் நிறுவனத்தில் வருமான வரி தாக்கல் செய்கிறோமா என்றால் தாக்கல் செய்கிறோம். நானும் வருமானவரி செலுத்துகிறேன் என்றால் சரிதான். மேற்படி பரிவர்த்தனையை எங்கள் நிறுவனத்தின் வருமானவரி கணக்கில் காண்பித்துள்ளேனா என்றால் காண்பித்துள்ளேன். இந்த நீதிமன்றத்தில் காசோலை சம்மந்தமாக எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 வழக்குகள் தாக்கல் செய்து முடிந்துவிட்டது. எனது பெயரிலும், எனது நிறுவனத்தின் பெயரிலும்7 வழக்குகள் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் 7 வழக்குகள் முடிந்துவிட்டது. மேற்படி 7 வழக்குகளில் உள்ள எதிரிகள் வெளி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால் இல்லை. எங்கள் நிறுவனத்தின் சார்பாக வெளி மாவட்டத்திலிருந்து வரும் நபர்களுக்கு லோன் கொடுக்கும் பழக்கம் உள்ளதா என்றால் கொடுப்போம்.

6. காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்றால் பொய்யாகும். காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியுடையது என்பதை நிரூபிப்பதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் காசோலை போதிய பணமில்லை திருப்பப்படடுள்ளதால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் சொல்வதுபோல் வெளி மாவட்டத்தை சார்ந்த எதிரிக்கு பெரிய தொகையை கொடுக்க வாய்ப்பில்லை என்றால் எதிரிக்கு நிலம் உள்ளது என்று எனது நண்பர் மூலம் தெரியவந்தால் பணம் கொடுத்தேன். எதிரிக்கு நிலம் உள்ளது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எதிரி கூறியதன் பேரில் தெரியும். எதிரிக்கு அதிக நிலம் உள்ள நிலையில், அவர் வெளி மாவட்டத்திற்கு வந்து என்னிடம் கடன் வாங்க அவசியமில்லை என்றால் அவரது அவசர

தேவைக்காக பணம் வாங்கினார். எதிரிக்கு என்னை யார் என்று தெரியாது என்றும், எனக்கும், எதிரிக்கும் எந்த வரவு செலவு இல்லை என்பதால் இந்த வழக்கினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. புகார் மனுவில் கூறிய எதிரி குடும்ப நண்பர் என்று கூறிவிட்டு நீதிமன்ற சாட்சியத்தில், எதிரி பணம் வாங்கியபோதுதான் அவரை பார்த்தேன் என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S

Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.07.22 17:12:05 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam